ஏனென்றால் கூட்டுறவிலேதான் லாபம் குறைந்த சதவீதத்தில் இருக்கிறது—கட்டாயமாகச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா விடுதிகள்

* 396 **வினா.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 15-ம் தேதி முதல் தமிழ்நாட்டில் மாநில அரசு சுற்றுலா விடுதிகளின் அறைகளுக்கு வாடகை 50 சதவிகிதம் உயர்த்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், சட்டசபை அங்கத்தினர்கள் வாடகை இல்லாமல் தங்குவதற்கு உத்தரவளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகைக்கு 25 சதவிகிதத்துக்கும் அதிகமாக வாடகை வாங்குகிறார்கள். சட்டசபை உறுப்பினர்களுக்கு வாடகையில்லாமல் தங்குவதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 25 சதவிகிதம் அல்ல 50 சதவிகிதம் வாடகை தரப்படுகிறது. சட்டசபை உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற் குறிப்பு இப்பொழுது இருக்கிறதா என்று கேட்டார்கள். அதுபற்றி சுற்றுலா வாரியம்தான் முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, சாதாரணமாக டூரிஸ்ட் பங்களாவிலே போய்த் தங்குவதற்கு வரிசை வாரியாக அதாவது ஆர்டர் ஆப் பிரையாரிடி வைத்திருப்பதில் சட்டசபை மேலவை உறுப்பினர்களுக்கு ஆறாவது இடம்தான் இருக்கிறது.

1972 மார்ச் 9]

அந்த இடத்தை 2-வது 3-வது இடமாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகைகள் 5 இடங்களிலே இருக்கின்றன. ஐந்து இடங்களிலும் இதுவரையிலே எந்த இடத்திலும் சட்டசபை உறுப்பினருக்கு இடம் மறுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. எந்த இடமாக இருந்தாலும், அவர்களுடைய பிரச்சினை கவனிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மறுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொல்வது நியாயமில்லை. நியாயமான கோரிக்கைகளை சட்டசபை, மேலவையிலுள்ள மக்களின் பிரதிநிதிகள் கேட்கிறார்கள். முதலிடங்களை மந்திரிகளுக்கும், இரண்டாவது இடத்தை சட்டசபை, மேலவை அங்கத்தினர்களுக்கும் கொடுப்பதுதான் நியாயம். அதுமட்டுமல்ல, ஊட்டியிலேயிருக்கும் தமிழகத்திலேயும், இன்னும் பல டூரிஸ்ட் ஹோம்ஸிலும் ஆபீசர்களுக்குத்தான் ப்ரஃபொன்ஸ் கொடுக்கிறார்களே தவிர, எம்.எல்.ஏ.-க்களுக்கு ப்ரஃபெரன்ஸ் கொடுப்பதில்லை. இதைப் புகார்களாகச் சொல்ல வேண்டாமென்று கருதி, கண்ணியத்தோடு புகார்களைச் சொல்வதில்லை. எனவே அப்படி புகார்களே இல்லை என்ற காரணத்தைச் சொல்லாமல் இதைப்பற்றிக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் சர்க்யூட் ஹவுஸையும், டூரிஸம் ஹோமையும் போட்டு இரண்டையும்பற்றிப் பேசுவது குழப்பத்தை அளிக்கும் என்ற காரணத்தினால் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது சுற்றுலா வாரியத்திற்குக் கீழே 5 இடங்களிலுள்ள மாளிகைகள். அது வெளியூர்களிலிருந்து, வெளிநாடுகளிலேயிருந்து வந்து தங்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இருக்கும் இடம். அது ஐந்து இடங்கள், உதகமண்டலம், திருச்சி, மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி. ஆகவே யாரும் அமைச்சர்கள் தங்குவது இல்லை. எனவே அமைச்சர்களைப்பற்றிய பிரச்சினை வருவதில்லை. வருபவர்கள் வியாபாரிகள், ஊர் சுற்றிப் பார்ப்பவர்கள்தான். சட்டமன்ற உறுப்பினர்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போவதாகத் தெரியவில்லை. அலுவல் காரணமாக தங்குவதற்காக

அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய எண்ணமிருக்கிறது. ஆனால் இதுவரையிலிருந்த வாடகையினால் ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது. சுற்றுலா வாரியம் வியாபார வாரியம். ஆகவே லாபகரமாக நடத்த வேண்டும். அப்படி நடத்துவதற்காகத்தான் 50 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

ஜவ்வாது மலையில் வனவிலங்குகள் உய்விடம்

*** 397 வினா.—திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் விலங்குகள் அதிகமாக வசிக்கும் பகுதியை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவாவர்களே, இப்பொழுது வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. ஆனால் ஜவ்வாது மலையில் வன விலங்குகள் நிறைய ஏற்படும் சூழ்நிலை நன்றாக இருக்கிறது. எனவே இப்பொழுது அங்கே வனவிலங்குகள் அதிகமாக இல்லாவிட்டாலும் வெளியிலேயிருந்து அஸ்ஸாம் போன்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து வனவிலங்குகளைப் பாதுகாக்க அரசு இனியாவது முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவாவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் சந்தவாசல் சரகத்தில் மான் பூங்கா அமைக்க திட்டமிருக்கிறது.

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கல்

*** 398 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.